**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**முன்னிலை:– திருமதி. ஆ. சுபஸ்ரீ, எல்.எல்.எம்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருப்பூர்**

2025–ம் ஆண்டு ஜுன் மாதம் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீ விசுவாவசு வருடம், வைகாசி திங்கள் 27ம் நாள்

**<u>இடைக்கால மனு எண். 226/2025</u>**
**இன்**
**<u>அசல் வழக்கு எண். 254/2022</u>**

ஜோதிமணி ..மனுதாரர்/3ம் பிரதிவாதி

..எதிர்..

1. தேவகி
2. வனிதா
(காப்பாளர் கணவர் முருகன்) ..எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு கடந்த 05.06.2025ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.உதயகுமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.P.கோபிநாத் அவர்கள் முன்னிலையாகியும், நிகழ்த்திய இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும் ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**<u>உத்தரவு</u>**

கடந்த 19.11.2024ம் தேதியன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரி மனுதாரரால் 1908ம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டம், கட்டளை 9 விதி 7 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :

**2.1** மனுதாரர் அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி. எதிர்மனுதாரர்கள் /வாதிகள் தரப்பில் விளம்புகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக கடந்த 04.01.2023ம் தேதியன்று வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றையதினம் மனுதாரருக்கு வயோதிகம் காரணமாக மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு அதற்கு தொடர்ச்சியாக நாட்டு மருத்துவம் பார்த்து வந்ததால், மனுதாரரின் வழக்கறிஞரை தொடர்பு கொண்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியவில்லை. தற்போது வழக்கறிஞரை தொடர்பு கொண்ட சமயத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரிய வந்துள்ளது.

**2.2** கடந்த 2023ம் வருடம் ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் சமாதானம் பேச வேண்டும் என்று வாதி தரப்பில் 1ம் பிரதிவாதி தேவகி என்பவர் மனுதாரரை அழைத்ததன் பேரில் வாதி தரப்பு வழக்கறிஞர் கோபிநாத் அவர்களை அலுவலகத்திற்கு சென்றிருந்த போது சமாதானம் பேசுவதை பொறுத்து மனுதாரரின் கையொப்பம் தேவைப்படுவதாக கூறி மனுதாரரிடம் பல கையொப்பங்கள் வாதி தரப்பு வழக்கறிஞர் வாங்கினார். கடந்த 17.08.2023ம் தேதியன்று மனுதாரர் சார்பாக வேறு ஒரு வழக்கறிஞர் ஆஜராகி 04.01.2023ம் தேதியிட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனுவும், எதிர்வழக்குரையில் தாக்கல் செய்திருப்பது மனுதாரருக்கு தெரியவந்தது. அவ்வாறு மனுதாரர் எந்த வழக்கறிஞர் மூலமாகவும் மனுவோ, எதிர்வழக்குரையோ தாக்கல் செய்யவில்லை.

**2.3** மேற்படி வழக்கறிஞர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் என்ன சங்கதிகள் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பதும் என்ன எதிர்வாதம்

செய்யப்பட்டுள்ளது என்பதும் மனுதாரருக்கு தெரியாது. மேற்படி சங்கதிகள் தெரியாததால் தான் பல வாய்தாக்களில் வழக்கறிஞருக்கு கட்டணம் செலுத்த முடியாத நிலையில் நேரடியாக நீதிமன்றம் முன்பு ஆஜராகி வந்ததால், அப்போது மனுதாரருக்கு வழக்கறிஞர் நியமிக்க வாய்தா கேட்டு வாய்தா கொடுக்கப்பட்டுள்ளது.

**2.4** மனுதாரரின் குடும்பத்தில் ஏற்பட்ட பண ரீதியான சூழ்நிலை, உடல் நலம் மற்றும் மனநலம் இல்லாததால் வழக்கறிஞரை நியமிக்க முடியாமல் கடந்த 01.07.2024 மற்றும் 19.11.2024 தேதிகளில் இ.ம.எண்.708/2023 மற்றும் 512/2024 மனுக்களில் எதிருரை தாக்கல் செய்யாததாலும் அசல் வழக்கில் ஆஜராகாததாலும் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் வேறு வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சங்கதிகள் மனுதாரர் தரப்பு வழக்கிற்கு எதிரானது என்பதோடு, மனுதாரர் தரப்பு எதிர்வாதமும் மனுதாரருக்கு சாதகமாக இல்லை. மனுதாரர் தரப்பு வழக்கை தாக்கல் செய்யவும், வேறு வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை நீக்கறவு செய்யவும் வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மற்றும் அவரது வழக்கறிஞர் வேண்டுமென்றோ அல்லது அலட்சியத்தினாலோ முன்னிலையாகாமல் இருக்கவில்லை. எனவே, மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** **<u>எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

**3.1** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. கடந்த 04.01.2023ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்த நாளில் மனுதாரர் மஞ்சள்காமாலை நோயால் பாதிக்கப்பட்டு நாட்டு மருத்துவம் பார்த்து வந்ததால் வழக்கறிஞரை சந்திக்க முடியவில்லை என்று சொல்வது பொய். கடந்த 02.11.2022ம் தேதி மனுதாரர்/3ம் பிரதிவாதிக்காக மூத்த வழக்கறிஞர் திரு.எம்.உதயசங்கர் அவர்கள்

வாக்காலத்து தாக்கல் செய்தும் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய கால அவகாசம் பெற்று சென்றுள்ளார். மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்பும் மனுவில் மனுதாரர்/3ம் பிரதிவாதி நேரடியாக நீதிமன்றத்தில் ஆஜராகி வந்துள்ளார்.

**3.2** மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு கையொப்பம் மட்டும் தான் போட தெரியும், படிக்கவோ, எழுதவோ தெரியாது என்று கூறியுள்ளார். மனுவுடன் இணைத்து தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு தெரியாது. மேற்படி சங்கதிகள் அனைத்தும் மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் உருவாக்கப்பட்ட பொய்யான சங்கதிகள். வழக்கு விசாரணையை தாமதப்படுத்தும் நோக்கத்துடனும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தகுந்த காரணம் இன்றி இம்மனு தாக்கல் செய்துள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில்,
" மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

**6. <u>தீர்வு</u> :–**

**6.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனுதாரருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் மனுதாரரால் நீதிமன்றத்தில் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், எனவே, மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச

உத்தரவை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், அசல் வழக்கின் விசாரணையை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி மனுதாரர்/3ம் பிரதிவாதி மற்றும் பலருக்கு எதிராக எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் கடந்த 19.11.2024ம் தேதியன்று மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.4** அசல் வழக்கில் கடந்த 04.01.2023ம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தபோது மனுதாரருக்கு ஏற்பட்ட மஞ்சள்காமாலை நோய் காரணமாக தொடர்ச்சியாக நாட்டு மருத்துவம் பார்த்து வந்ததால், அன்றையதினம் வழக்கறிஞரை தொடர்பு கொண்டு உரிய அறிவுறுத்தல் கொடுத்து மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், கடந்த 2023ம் வருடம் ஜுலை, ஆகஸ்ட் மாத வாக்கில் சமாதானம் பேசவேண்டுமென்று 1ம் எதிர்மனுதாரர்/1ம் வாதி, மனுதாரர்/3ம் பிரதிவாதியை அழைத்ததன் பேரில், வாதி தரப்பு வழக்கறிஞர் அலுவலகத்திற்கு மனுதாரர்/3ம் பிரதிவாதி சென்றிருந்தபோது சமாதானம் பேசுவதை பொறுத்து மனுதாரர்/3ம் பிரதிவாதியின் கையொப்பத்தை பல தாள்களில் வாதி தரப்பு வழக்கறிஞர் பெற்றதாகவும், அதன் பிறகு மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞருக்கு வழக்கு கோப்புக்களை திரும்ப கொடுக்குமாறு கேட்டு மனுதாரர் பெயரில் ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அந்த கடிதம் மனுதாரரின் ஒப்புதலுடன் அனுப்பப்படவில்லை என்றும், கடந்த 17.08.2023ம் தேதியன்று

மனுதாரர் சார்பாக வேறு ஒரு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி 04.01.2023ம் தேதிய ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனுவும், எதிர்வழக்குரையும் தாக்கல் செய்திருப்பதாகவும், ஆனால், அவ்வாறு மனுதாரர் எந்த வழக்கறிஞர் மூலமாகவும் மனுவோ அல்லது எதிர்வழக்குரையோ தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரர் தரப்பு வழக்கை அவர் தாக்கல் செய்யவும், வேறு வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நீக்கறவு செய்யவும் இத்துடன் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, கடந்த 19.11.2024ம் தேதியில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**6.5** அசல் வழக்கில் கடந்த 13.09.2022ம் தேதி மனுதாரர்/3ம் பிரதிவாதி சார்பாக வழக்கறிஞர் திரு.உதயசங்கர் அவர்கள் முன்னிலையாகி வக்காலத்து தாக்கல் செய்துள்ளார். கடந்த 04.01.2023ம் தேதியன்று மனுதாரர்/3ம் பிரதிவாதி சார்பாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்துசெய்யக்கோரி கடந்த 17.08.2023ம் தேதியன்று மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு இ.ம.எண்.707/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 16.11.2023ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. கடந்த 16.10.2024ம் தேதியன்று மேற்படி மனுதாரர்/3ம் பிரதிவாதிக்காக தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்து திரும்ப பெறப்பெற்று மனுதாரர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி புதிய வழக்கறிஞர் நியமனம் செய்வதற்காக அவகாசம் கோரிய நிலையில், கடந்த 19.11.2024ம் தேதியன்று மனுதாரர்/3ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தினால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**6.6** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில், மனுதாரருக்கு ஏற்பட்ட மஞ்சள்காமாலை நோயின் காரணமாக தொடர்ந்து நாட்டு மருத்துவம் பார்த்ததால் கடந்த 04.01.2023ம் தேதியன்று அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய

இயலவில்லை என்று தெரிவித்துள்ளாரே தவிர, கடந்த 19.11.2024ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகாததற்கான காரணத்தை தெரிவிக்கவில்லை.

**6.7** மனுதாரர் தரப்பில் வேறு ஒரு வழக்கறிஞர் முன்னிலையாகி அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்துசெய்யக்கோரி கடந்த 17.08.2023ம் தேதியன்று மனுவும், எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளதால் அதனை நீக்கறவு செய்யவேண்டும் என்று மனுதாரர் குறிப்பிட்டுள்ளது குறித்து அதற்கான மனு தாக்கல் செய்யப்படும்போது தீர்மானிக்கப்படும். இம்மனுவானது கடந்த 19.11.2024ம் தேதியன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை நீக்கறவு செய்வது குறித்து தீர்மானிக்கவேண்டிய மனுவாகும்.

**6.8** கடந்த 19.11.2024ம் தேதியன்று மனுதாரர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகாததற்கு தகுந்த காரணம் குறிப்பிடாதபோதும், இருதரப்பிற்கும் அவர்களது தரப்பு வழக்கை முன்னிலைபடுத்துவதற்கு போதிய வாய்பளித்து அசல் வழக்கில் தீர்வு காண்பது நீதியின் பால் உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்து எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர், எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையாக ரூ.3000/-ஐ மறுவாய்தா தேதிக்குள் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடன் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**அழைக்க மறுவாய்தா :** 24.06.2025

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.06.10 15:56:29 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்

**<u>இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை.

A SUBASHRI Digitally signed by A SUBASHRI Date: 2025.06.10 15:56:37 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருப்பூர்.